ஜாக்சன்வில் தமிழ் பள்ளியின் பருவ இதழ்

# மயிலிறகு

வாழ்க தமிழ்! வளர்க தமிழினம்

மயில் 2 இறகு 2, மே-15 -2021

## இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்




கதை நேரம் –

அறம் செய விரும்பு

- சுதாகர் இரத்தினம்



உள்ளே...

# பதிப்பாசிரியர் குழுவிடமிருந்து..

**அனைவருக்கும் வணக்கம்!**

**மயிலிறகு பத்திரிகையின்**

**இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

கொரோனா காலம் முடிந்தது என்று எண்ணுகையில் மீண்டும் வெவ்வேறு உரு எடுத்து நம்மை பதம் பார்த்துக் கொண்டிருக்கும் இச்சூழ்நிலையில் அனைவரும் கொரோனா தடுப்பூசி பெற்று பாதுகாப்பாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம். மயிலிறகு பத்திரிக்கைகான பங்களிப்பும்,வரவேற்ப்பும் அதிகரித்து வருவது குழுவிற்கு பெரும் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அளிக்கிறது. மேலும் இதில் மாணவர்களுடன், பெற்றோர்களும் உங்களுடைய படைப்புகள் கவிதை, கட்டுரை என மயிலிறகில் பதிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பதிப்பில் உள்ள சில தகவல்கள் மட்டுமே இணைய தளத்தில் எடுக்கப்பட்டவை, மற்ற அனைத்தும் முற்றிலும் சுயமாக உருவாக்கப்பட்டவை. எனவே இந்த இதழுக்கு சற்று நேரம் ஒதுக்கி, தாங்கள் தங்கள் குழந்தைகளுடன் படிக்கும் படி அன்பாக கேட்டுக் கொள்கிறோம். வெளியிட உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி!

# உள்ளே.....


- 2020-2021 ATAநல்லாசிரியர் விருது
- தமிழ் தேனீ 2020-2021 பங்கேற்பாளர்கள்
- தமிழ் மாதங்கள்
- உங்கள் பிறந்த நாள் அன்று என்ன விசேஷம்?
- சித்திரம் பேசுதடி
- கதை நேரம் -அறம் செய்ய விரும்பு -சுதாகர்
- பாடிப்பழக -நல்லதோர் வீணை
- வார்த்தை விளையாட்டு
- செய்திகள்

# 2020-2021
# ATA நல்லாசிரியர் விருது

நம் பள்ளியில்
**2020-21 ATA** நல்லாசிரியர்
விருதை பெறுபவர்கள்



நிர்மலா
ராஜசேகர்
நிலை-4

ஸ்ரீவித்யா
ஐயங்கார்
நிலை-2



This Photo by Unknown Author is licensed under CC BY-ND

# தமிழ் தேனீ 2020-2021 பங்கேற்பாளர்கள்

**FETNA** தமிழ் தேனீ போட்டியில் நமது பள்ளியிலிருந்து சென்ற போட்டியாளர்கள் **வட்டார(Regional) அளவில் வெற்றி பெற்று மண்டல(Zonal) அளவில்** கலந்து கொள்ள போகின்றார்கள். அவர்களது பெயர்கள் பின் வருமாறு ;

**Level 1**
- அகில் கண்ணன் - நிலை 2
- ஷ்ரத்தா ஹரிஹரன் - நிலை 2

**Level 2**
- சஞ்சய் ராஜேஷ் - நிலை 3
- மித்ரா வசந்தன்- நிலை 2

**Level 3**
- அஸ்வத் நாராயண் வித்யாசாகர் - நிலை 2
- ஹர்ஷிதா சீனிவாசன் - நிலை 4

**Level 4**
- திவ்யா குமார்- நிலை 7
- ஓவியா ரகுபதி - நிலை 7

This Photo by Unknown Author is licensed under CC BY-ND


தமிழ் மாதங்கள்
சித்திரை
வைகாசி
ஆனி
ஆடி
ஆவணி
புரட்டாசி
ஐப்பசி
கார்த்திகை
மார்கழி
தை
மாசி
பங்குனி
EXAM

# உங்கள் பிறந்த நாள் அன்று என்ன தினம்?

உலகமெங்கும் எண்ணற்ற தினங்கள் கொண்டாடப்படுகின்றன. அவரவர் பிறந்த நாள் அன்று உலகம் எதை கொண்டாடுகிறது என்பதை நம் மாணவர்கள் அறிய கீழே பாருங்கள்

## ஜனவரி

| பெயர் | தேதி | அன்று என்ன தினம் | ஆங்கிலத்தில் |
|---|---|---|---|
| ரினேஹா ரமேஷ் | 1-Jan | உலகளாவிய குடும்ப தினம் | Global Family Day |
| அக்ஷத் கதிக் | 5-Jan | தேசிய பறவை நாள் | National Bird Day |
| முகில் கண்ணன் | 10-Jan | தேசிய நான்காம் வகுப்பு மாணவர்கள் தினம் | National Fourth Graders Day |
| நந்தனா நேமினாதன் | 12-Jan | தேசிய இளைஞர் தினம் | National Youth Day |
| ரீகன் அனில்ராஜ் | 14-Jan | தேசிய செல்லப்பிராணி உடை தினம் | National Dress Up Your Pet Day |
| அர்ஜுன் சுரேஷ் | 21-Jan | அருங்காட்சியகம் செல்பி தினம் | Museum Selfie Day |
| அஸ்வின் செந்தில்குமார் | 25-Jan | எதிர் நாள் | Opposite Day |
| அன்விதா ஐயங்கார் | 30-Jan | தேசிய குரோசண்ட் தினம் | National Croissant Day |

உங்கள் பிறந்த நாள் அன்று என்ன தினம்?

# பிப்ரவரி

| பெயர் | தேதி | அன்று என்ன தினம் | ஆங்கிலத்தில் |
|---|---|---|---|
| தனிஷா கோபிநாத் | 7-Feb | தேசிய ஃபெட்டுசின் ஆல்ஃபிரடோ தினம் | National Send a Card to a Friend Day |
| நிஷா கோபிநாத் | 7-Feb | தேசிய ஃபெட்டுசின் ஆல்ஃபிரடோ தினம் | National Send a Card to a Friend Day |
| சஞ்சனா மோகன்ராஜா | 16-Feb | தேசிய பாதாம் தினம் | National Almond Day |
| ஆராதன கணேஷ்குமார் | 18-Feb | தேசிய பராமரிப்பாளர்கள் தினம் | National Caregivers Day |
| தக்ஷினேஷ்வர் உமா சங்கர் | 19-Feb | தேசிய சாக்லேட் புதினா நாள் | National Chocolate Mint Day |
| ஸ்மரன் சுரேஷ் | 20-Feb | நேஷனல் லவ் யுவர் பெட் டே | National Love Your Pet Day |
| அஸ்வந்த் பாலகுமார் | 21-Feb | குடும்ப தினம் | Family Day |
| அதிதி சுப்பிரமணியன் | 26-Feb | தேசிய பிஸ்தா தினம் | National Pistachio Day |

# சித்திரம் பேசுதடி…

ஸ்மரன் சுரேஷ்
நிலை-1



ஷ்ரத்தாஹரிஹரன்
நிலை-2



மாதினியா ரகுபதி
நிலை-3



கதை நேரம்

# அறம் செய விரும்பு

- சுதாகர் இரத்தினம்

## காட்சி - 1
## [ராமசாமியின் வீடு]

**ராமசாமி**: ஸ்ருதி , இன்னுமா ரெடி ஆகல? ஸ்கூலுக்கு லேட்டா ஆச்சு, சீக்கிரம் வா.

(ராமசாமி வெளியில் சென்று தன் ஸ்கூட்டர் - ஐ ஸ்டார்ட் செய்தான்)

**ஸ்ருதி**: இதோ வந்துட்டேன்பா.

**அம்மா**: ஸ்ருதி, மறக்காம லஞ்ச் பாக்சை எடுத்துட்டு போ.

(ராமசாமி ஸ்கூட்டர் - ஐ மிதித்து கொண்டிருந்தான். அப்போது அங்கு தினசரி வரும் பிச்சைக்காரன் வந்தான்.)

**பிச்சைக்காரன்**: ஐயா, இன்னைக்காவது பிச்சை போடுங்கய்யா.

**ராமசாமி**: யோவ், உனக்கு வேற வீடே கிடைக்கலையா. நானே வண்டி ஸ்டார்ட் ஆகலைன்னு கடுப்புல இருக்கேன். அடுத்த வீட பாருய்யா. போ. (ஸ்ருதி இதை பார்த்து கொண்டிருந்தாள்.)

**ஸ்ருதி** : ஏம்ப்பா அவரு பாவம்தானே. ஏதாவது தரலாம்ல.

**ராமசாமி** : அதெல்லாம் எனக்கு தெரியும். நீ வண்டில ஏறு. வண்டி ஸ்டார்ட் ஆயிடுச்சு. நாம கிளம்பலாம்.

## காட்சி - 2
## [ராமசாமியின் அலுவலகம்]

**மேனேஜர்**: யோவ் ராமசாமி இன்னுமா இந்த வேலைய முடிக்கல? இப்பவே மணி ஆறு ஆகுது. இதை முடிக்காம வீட்டுக்கு போக கூடாது. சொல்லிட்டேன். நான் கிளம்புறேன்.

**ராமசாமி**: சரிங்க சார். முடிச்சுடுறேன். நீங்க கிளம்புங்க. (மேனேஜர் கோபத்துடன் வீட்டிற்கு புறப்பட்டார்.) இதை முடிக்க மணி எட்டு ஆயிரும். சரி, வேற என்ன பண்ணி தொலைக்கிறது. முடிக்க வேண்டியதுதான். (அலுவலக கடிகாரத்தில் அலாரம் அடித்தது) அட மணி எட்டு ஆச்சு, ஆனா இன்னும் வேல முடியலையே. சரி வீட்டுக்கு கிளம்புவோம் நாளைக்கு நானா மேனேஜரான்னு பாத்துருவோம்.

(கோபத்துடன் வீட்டிற்கு கிளம்பினான் ராமசாமி. சிறிது தூரம் ஸ்கூட்டர்-ல் சென்றவன் சற்று நிலை தடுமாறி அப்படியே கீழே விழுந்தான். தலையில் நல்ல அடிபட்டு தரையில் விழுந்து கிடந்தான். அப்போது சற்று தூரத்தில் ஒரு உருவம் அவனை நோக்கி வருவது அவன் கண்களில் தெரிந்தது. அப்படியே மயங்கி விழுந்தான்.)

## காட்சி - 3
## [மருத்துவமனை]

(ராமசாமி மெதுவாக கண் திறந்து பார்க்கிறான். அவன் அருகில் ஸ்ருதியும், அவனது மனைவியும் இருக்கின்றார்கள்.)

**ஸ்ருதி**: அப்பா, இப்ப எப்படிப்பா இருக்கு?
**ராமசாமி**: நான் எப்படி இங்க வந்தேன்? ஆபீஸ்-ல இருந்து வரும்போது ஸ்கூட்டர்-ல நிலை தடுமாறி விழுந்து மயங்கிட்டனே.
**அம்மா** : மணி ஒன்பது ஆகியும் நீங்க வரலையேன்னு நானும் ஸ்ருதியும் பதட்டமா இருந்தோம். அப்ப யாரோ கதவ தட்டுற சத்தம் கேட்டு திறந்தோம்.
**ஸ்ருதி** : அப்ப வெளியில, காலைல நீங்க விரட்டி விட்ட பிச்சைக்காரன் நின்னுட்டு இருந்தாரு. அவருதான் நீங்க விழுந்தத பாத்துட்டு பக்கத்துல இருந்தவர்களுக்கு தகவல் சொல்லி இந்த ஹாஸ்பிடல்-ல கொண்டு வந்து சேத்தாங்கலாம். அதோட நிக்காம நம்ம வீட்டுக்கு ஓடி வந்து எங்களுக்கும் தகவல் சொன்னாருப்ப. நீங்க அவருக்கு தர்மம் பண்ணலைன்னாலும் அவரு உங்களுக்கு உதவி பண்ணிட்டாருப்பா. (ராமசாமி வெக்கத்தில் தலை குனிந்தான்)

**நீதி**: குழந்தைகளே! நம்மால் இயன்ற உதவியை எப்பொழுதும் அனைவர்க்கும் செய்ய வேண்டும்.

பாட்டு பாடிப் பழக:

# நல்லதோர் வீணை

– பாரதியார் கவிதை

சொல்லடி சிவசக்தி – எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்

சொல்லடி சிவசக்தி – எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்

வல்லமை தாராயோ
வல்லமை தாராயோ – இந்த
மானிலம் பயனுர வாழ்வதற்கே

வல்லமை தாராயோ – இந்த
மானிலம் பயனுர வாழ்வதற்கே

சொல்லடி சிவசக்தி – நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ

நல்லதோர் வீணை செய்தே – அதை
நலங்கெடப் புழுதியில் எரிவதுண்டோ

தசையினைத் தீச்சுடினும் – சிவ
சக்தியைப் பாடும் நல் அகம் கேட்டேன்

நசையரு மனம் கேட்டேன் – நித்தம்
நவமெனச் சுடர் தரும் உயிர் கேட்டேன்

அசைவறு மதி கேட்டேன் – இவை
அருள்வதில் உனக்கெதும் தடையுள்ளதோ

இவை
அருள்வதில் உனக்கெதும் தடையுள்ளதோ

நல்லதோர் வீணை செய்தே – அதை
நலங்கெடப் புழுதியில் எரிவதுண்டோ

நல்லதோர் வீணை செய்தே – அதை
நலங்கெடப் புழுதியில் எரிவதுண்டோ

-தொகுப்பு- நிர்மலா

# வார்த்தை விளையாட்டு

விடுபட்ட வார்த்தைகளை கண்டுபிடிக்க

## திருக்குறள்

கேடில் விழுச்செல்வம் -------- யொருவற்கு
மாடல்ல மற்றை -------

துப்பார்க்குத் --------- துப்பாக்கித் துப்பார்க்குத்
----------- தூஉம் மழை.

## பழமொழிகள்

1. சிறு துரும்பும் ---- குத்த ------
2. ----- வளையாதது, ------ வளையுமா?
3. அடி ----- அடி அடித்தால் ------ நகரும்.
4. கற்றது ------ --------- உலகளவு.

# விளையாடு வினையாக்கு!

கீழே உள்ள விடுகதைகளை கொண்டு விடைகளை கண்டு பிடிக்கவும்

## விடுகதைகள்

1.பறப்பேன் ஆனால் பறவை இல்லை
வாலுண்டு ஆனால் குரங்கு இல்லை.

2. சூடு நன்றாக ஆகிடுமே
சுருக்கங்களை போக்கிடுமே.

3.கைகளை வீசி சுற்றுவேன்
காற்றை நன்றாய் தந்திடுவேன்.

## சென்ற இதழ் புதிர் விடைகள்

நிழல்
சைக்கிள்
வாழை
தேங்காய்
உப்பு

விடைகளை Pradeekutty@yahoo.co.in என்ற முகவரிக்கு மின்அஞ்சல் அனுப்பவும். சரியான விடை அளிப்பவருககு ஒரு ஆச்சரியம் காத்துக் கொண்டிருக்கிறது

# செய்திகள்

- ஜாக்சன்வில் தமிழ் பள்ளி 2021-2022 ம் ஆண்டு மாணவர்கள் பதிவு ஏப்ரல் 14- தொடங்கி மே 30 ம் தேதி முடிவடைகின்றது. பள்ளி பதிவுக்கான படிவம் பள்ளி இணையதளத்தில் உள்ளது (https://jtmtamilschool.org/school-registration/)
- 2020-2021 ம் பள்ளி ஆண்டுக்கான இறுதி தேர்வு -மே 15ம் தேதி நடைப்பெறவுள்ளது.
- 2020-21 தமிழ் பள்ளி அரட்டை அரங்கம் நிகழ்ச்சிகளை கீழே உள்ள இணைப்பில் காணலாம். (https://youtube.com/channel/UCkTDArhYJ9n3JG9V_rr0LHQ).

இதழை மேலும் சிறப்பிக்க உங்கள் உதவி மிகவும் அவசியம். உங்கள் கருத்துக்களையும், குறிப்புகளையும் மின்னஞ்சல் வழியாக தெரிவிக்கவும்.

மின்னஞ்சல் தொடர்பு:
Pradeekutty@yahoo.co.in
kathiravanp@yahoo.com